1971 ஜூலை 30]

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த இ.எஸ்.ஐ. ஸ்கீம்படி தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய மருத்துவ சிகிச்சைக்கு அந்த கார்ப்பரேஷனே முழுக்க முழுக்கச் செலவு செய்ய வேண்டிய நிலையில் ஸ்டேட் கவர்ன்மெண்டும் தொகை அதிகப்படியாகக் கொடுக்கின்ற காரணத்தால் அந்தத் திட்டம் பல இடங்களுக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிற காரணத் தால் அப்ராக்சிமேட்டாக வருகிற ஆண்டில் எவ்வளவு செலவாகும்? அதை மத்திய அரசுக்குச் சுட்டிகாட்டி அதன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பல முறை அப்படிக் கேட்கப்பட்டிருக்கிறது. நேரிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அந்த முயற்சியைத் தொடர்ந்து அரசு மேற்கொள்ளும்.

அண்ணாவின் கதை

* 546 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக வானொலியில் "அண்ணாவின் கதை" பாடல் மூலம் சிறுவர்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை

திரு. கே. எ. வகாப்: வானொலியில் இப்போது காந்தியின் கதையைச் சொல்லி வருகிறார்கள். அதே போன்று அண்ணா போன்ற வர்களுடைய கதையையும் வானொலியில் ஒலிபரப்புவது குழந்தை களுக்கு நல்ல படிப்பினையாக இருக்கும் என்ற காரணத்தால் அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காந்தியடிகளுடைய வரலாறு காந்தி மகான் கதை என்று வில்லுப்பாட்டு நிகழ்ச்சியாக ஓராண்டுக்கு முன்பு இருந்து வானொலியில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. அதைப் போல் அண்ணாவின் கதையையும் சிறுவர்களுக்கு நல்லுரை போதிக்கும் வகையில் அண்ணாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், சொல்லோவியங்கள் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டு மென்று அரசு வானொலியினரைக் கேட்டுக் கொள்ள இருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி: அண்ணாவினுடைய சிறந்த சொற்பொழிவு கள் டேப் ரெக்கார்டு செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய சிறந்த பேச்சுக்களை வாரம் ஒருமுறை ஒலிபரப்புத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அண்ணாவினுடைய பேச்சுகள் பல இசைத்தட்டுகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. கூடுமான வரையில் மத்திய அரசின் மூலம் வானொலியில் அந்த உரைகளைத் தேவைப்படுகின்ற நேரத்தில் ஒலிபரப்புவதற்கு இந்த அரசு கேட்டுக் கொள்ளும்.

திரு. வ. சின்னசாமி: அண்ணாவினுடைய வாழ்க்கை வரலாற்றை நாடக மூலம் வானொலியில் ஒலி பரப்ப அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அண்ணவைப் பற்றி நாட்டு மக்கள் நினைவு கொள்ள முழுக்க முழுக்க வானொலியை நம்ப வேண்டியதில்லை. அண்ணா அவர்கள் நாட்டு மக்கள் அனைவர் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ளார்கள். அண்ணா அவர்களுடைய சொல்லோவியங்கள், வாழ்க்கை வரலாறு இப்போதே வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளாகவும், இசை நிகழ்ச்சிகளாகவும், நாடக நிகழ்ச்சி களாகவும் நாட்டு மக்களுக்குப் பரப்பப்பட்டு வருகிறது.

திரு. கா. காளிமுத்து: அண்ணாவின் கதை ஒலிபரப்பாக நிகழ்த்தப் படுகின்றபோது அந்தக் கதையைக் கவிதை நடையில் முதல்வர் அவர்கள் எழுதித்தருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திருமணம் ஆகவில்லை. ஆன பிறகு குழந்தைக்கு என்ன பெயர் என்று கண்டுபிடிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா: அண்ணா அவர்களைப் பற்றி நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தானே ஒரு கவிதை இயற்றிப் பாடியுள்ளார்கள். அதைப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் வைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இருக்கிற எரிச்சல் போதாதா?

Expenditure on staff of State Planning Commission.

* 547 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state the annual expenditure that will be incurred on the staff of the State Planning Commission?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநிலத் திட்ட ஆணைக்குழு இப்போது தான் அமைக்கப்பட்டுள்ளது, திட்ட ஆணைக்குழுவின் பணியாளர் பற்றிய செலவை மதிப்பிடச் சில காலம் ஆகும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த மாநிலத் திட்டக் குழுவானது இதுவரை என்ன பணியாற்றி இருக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போதுதான் தொடங்கப் பெற்று அதனுடைய பணி ஆரம்பமாகியிருக்கிறது. அதற்குள்ளாக அவைகளைப் பற்றி எதுவும் கூறுவதற்கு இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மாநிலத் திட்ட ஆணைக் குழுவானது அடுத்த சட்டமன்றத் தொடரிலாவது அவர்களுடைய முதல் ஆலோசனைகளை எடுத்து வைப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் ஏற்கனவே அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அடுத்த தொடரில் அவர்களுடைய முதல் பரிந்துரைகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவார்கள். அதைப் பற்றி நாம் இங்கு கருத்துக்களைச் சொல்லலாம் என்று கூறியிருக்கிறேன்.

திரு. கோவை செழியன்: இந்த மாநிலத் திட்டக் குழு மாநிலத் திற்குத் தேவையான தொழிற்சாலைகள், அதற்கான வாய்ப்புகள்பற்றி ஆராய்ந்தறிந்து ஒரு திட்டத்தைக் கொடுத்தால் அவைகளை அப்படியே மத்திய அரசாங்கமும், மத்தியத் திட்டக் குழுவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா?